# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.78/2013 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | பி.வா.சா-01 (DW-01 ) |
| பெயர் | :- | முருகன் |
| தேதி | :- | 08-07-2025 |

**சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி :-**

வழக்குச் சொத்து இரண்டு இன சொத்து என்றால் சரிதான். முதல் இன சொத்து 1.50 ஏக்கர் என்றால் சரிதான். அதற்கு நான்கெல்லை சொல்ல முடியும். என் தாத்தா இறந்த விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் உடன் இருந்தேன். அப்போது எனக்கு 7 வயது இருக்கும். என் தகப்பனாருடன் பிறந்த இந்திராணி, அமுதவள்ளி, புஷ்பா, வளர்மதி ஆகியோருக்கு திருமணம் நடந்தது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் வளர்மதிக்கு திருமணம் நடந்தது மட்டும் எனக்கு நேரடியாக தெரியும். மற்றவர்களுக்கு என்ன சீர்வரிசை செய்தனர் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சொல்லி தெரியும். எந்த ஆண்டு எனக்கு தெரியும் என்று கேட்டால் 8 ஆம் வகுப்பு படிக்கும்போது தெரியும். 8 ஆம் வகுப்பு எப்போது படித்தேன் என்றால் 2010. நான் Diploma information technology படித்துள்ளேன். எந்த கல்லூரி என்றால் CSI polytechnic அஸ்தம்பட்டி.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNSA010010542013/truecopy/order-6.pdf

வாதிகள் வழக்கு போட்ட விவரம் எப்போது எனக்கு தெரியும் என்றால் எனக்கு நீதிமன்றத்திலிருந்து தபால் வந்தது. அதை வைத்து தெரியும். சீர்வரிசையாக இந்திராணி, அமுதவள்ளி, புஷ்பா, வளர்மதி ஆகியோருக்கு தலைக்கு 10 சவரன் நகை, கட்டில், பீரோ, சீர்வரிசை, தலை ஆடி, தலை பொங்கல் எல்லாம் செய்தார்கள். இதெல்லாம் என் அப்பாவும் தாத்தாவும் சேர்ந்து செய்தார்கள். கடைசி அத்தைக்கு என் அப்பா மட்டும் செய்தார்.

திருமணம் ஆன பின் மேற்சொன்ன நால்வரும் என் தாத்தா உயிரோடு இருந்த காலத்தில் எங்கள் வீட்டிற்கு வந்து செல்வார்கள் என்றால் நோம்பிக்கு வருவார்கள். நல்ல முறையில்தான் வந்து செல்வார்கள் என்றால் சரிதான். சண்டை சச்சரவுகள் எதுவும் வராது என்றால் சரிதான். என் தாத்தா இறந்ததற்கு அத்தைகள் அனைவரும் வந்தனர் என்றால் வளர்மதி மட்டும் வீட்டிலேயே இருந்தார். மற்ற மூவரும் வந்தனர்.

என் தகப்பனாரும் அத்தைகளும் கூட்டு குடும்பமாக ஒன்றாகதான் இருந்தனர் என்றால் திருமணத்திற்குபின் தனிதனியாகதான் இருந்தனர். அத்தைகள் பெயரும் பட்டாவில் இருப்பதால்தான் அதை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து முழுக்க என் தாத்தாவின் பூர்வீக சொத்து என்றும் அதை எனக்கும் என் அண்ணுக்கும் என் தகப்பனாருக்கும் அறுதியாவண கொடையாக கொடுக்க என் தாத்தவிற்கு உரிமை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அது பூர்வீக சொத்து என்பதால்தான் தாத்தாவின் சகோதர்களுக்கு ஒரு பாகம் கொடுத்து பாக முச்சலிக்கை எழுதிக்கொண்டனர் என்றால் என் தாத்தாவின் சகோதரி அவருடைய பெற்றோரை பார்த்துக்கொண்டதால் அவ்வாறு

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNSA010010542013/truecopy/order-6.pdf

www.ecourtsindia.com

கொடுத்தார். அதுபோன்றதொரு வாசகம் எதுவும் அந்த ஆவணத்தில் இல்லை என்றால் சரியல்ல. எல்லப்பமுதலியாரின் தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 1960 ஆம் ஆண்டு. என் தாத்தாவிற்கு அதிக மகள்கள் இருந்ததால் அதிகமாக சொத்து ஒதுக்கி பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் சரியல்ல.

தாத்தா இறந்தபின் நாங்கள் விற்ற சொத்துக்கான கிரய பத்திரத்தில் வாதிகள் கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். எங்களுடைய சொத்து என்பதால் கையொப்பம் வாங்கவில்லை. நாங்கள் விற்ற சொத்துக்கள் தாத்தா அறுதியாவண கொடையாக கொடுத்தது என்றால் சரிதான். தாத்தா இறப்பதற்குமுன் எங்கள் வீட்டில் எவ்வளவு நாள் இருந்தார் என்றால் ஓராண்டு இருந்தார். சான்றாளர் பின்னிட்டு இரண்டு வீடு உள்ளது என்றும் ஒரு வீட்டில் தாத்தா இருந்தார் என்றும் எங்களுடன்தான் இருந்தார் என்றும் கூறுகிறார். தாத்தா இறப்பதற்கு ஓராண்டிற்குமுன்தான் அறுதியாவணம் எழுதினார் என்றால் சரிதான்.

அத்தைகள் எங்களிடம் வந்து சொத்துக்கள் ஏதாவது கொடுங்கள் என்று கேட்டார்களா என்றால் இதுவரை கேட்கவில்லை. வழக்குச் சொத்துக்கள் குடும்ப சொத்துக்கள் என்றும் அவற்றில் பாகம் பெறுவதற்கு வாதிகளுக்கு உரிமை உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNSA010010542013/truecopy/order-6.pdf